Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

Mr. Kodiswaran

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஆவணி 22    ( 07 - 09 - 1991 )    சனிக்கிழமை    ஓசை: 201

## ஆண்டு ஆறிற்கான வரலாற்றுப் பாடநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆறாம் ஆண்டிற்கான வரலாற்றுப் பாடநூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூகக் கல்வி மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு வேலணைக் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. புலேந்திரன் தலைமை தாங்குகிறார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை, வரலாற்றுத் துறை தலைவர் கலாநிதி. சி. க. சிற்றம்பலம் யாழ்ப்பாண பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர். (4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசா அதிருப்தியாளர்கள்

# ஐ. தே. கட்சியில் இருந்து நீக்கம்?

## அம்பாறையில் கிளைமோர்; இராணுவத்திற்குச் சேதம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கிளைமோர் தாக்குதலால் சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளதாகத் தெரியவருகிறது

இச்சம்பவம் கடந்த புதன் கிழமையன்று நிகழ்ந்துள்ளது: அன்றைய தினம் அக்கரைப்பற்று மூன்றாம் கட்டை என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் ரோந்து சென்ற போதே புலிகளால் மிதிவெடியுடன் இணைத்து வைக்கப்பட்ட கிளைமோர் வெடித்துள்ளது. இதில் இராணுவத்தினர் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளபோதிலும் சேதவிபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

## குறிகாட்டுவான்கடற்பரப்பில் கடற்படை மீது தாக்குதல்

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான் துறையை நோக்கி வந்த சிறிலங்கா கடற்படை பீரங்கிப்படகொன்றின் மீது விடுதலைப் புலிகள்கடும் தாக்குதல் நடாத்தியதை அடுத்து அப் பீரங்கிப் படகு திரும்பிச் சென்றது.

நான்காம் திகதி புதன் கிழமை இரவு பிரஸ்தாபபீரங்கிப் படகு குறிகாட்டுவான் துறையை அண்மித்த போது விடுதலைப் புலிகள் அதன் மீது தாக்குதல் நடாத்தினர். இதனால் அப்படகு வந்தவேகத்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கியதும் முகாம் திரும்பினர்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் காட்டுப் பகுதியைச் சுற்றி வளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் பலர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்ததால் தமது முயற்சியைக் கைவிட்டு முகாம் திரும்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை நிகழ்ந்துள்ளது. அன்றைய தினம் திருமலை மாவட்... பன்மதவாச்சி, பத்தாம் கட்டை ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் அக்காட்டுப் பகுதியில் தேடுதல் மேற்கொள்ள முயன்றனர்.

அச்சமயம் அப்பகுதியில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட ஐந்து மிதிவெடிகள் வெடித்துள்ளன. இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டு முகாமிற்குத் ...

## இருபடை பலி; 12 பேர் காயம்

தாண்டிக்குளம் இராணுவ முகாமுக்கு சற்று தொலைவில் உள்ள கொக்குவெளி இராணுவ முகாம் அருகே நேற்றுமுன்தினம் நண்பகல் குண்டு ஒன்று வெடித்ததில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் மேலும் 12 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இராணுவத்தினர் வவுனியாவிலிருந்து உலங்குவானூர்தி மூலம் அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## லலித், பிரேமச்சந்திரா செயற்குழுவில் இருந்து நேற்று வெளியேற்றப்பட்டனர்

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக்கூட்டத்தில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் அதிருப்தியாளர்களை கட்சியில் இருந்து வெளியேற்றும் தீர்மானம் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியும், ஜி.எம். பிரேமச்சந்திராவும் ஐக்கியதேசியக்கட்சி செயற்குழுவில் இருந்து நேற்றிரவு விலக்கப்பட்டனர்.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு ஐ. தே. கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறி கொத்தாவில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சுமார் 3000 ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் பங்கு கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிகின்றது

இக் கூட்டத்தில் அண்மையில் கட்சியில் ஏற்பட்ட பிளவு பற்றியும், அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நல்லூர் தேர்த் திருவிழா

(நல்லூர்)

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று ஆகும். காலை ஆறு முப்பது மணிக்கு ஆரம்பம் ஆகும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து 8 மணிக்குத் தேர் வலம்வர ஆரம்பமாகும்.

## சுட்டுக் கொலை

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழ்ப்பொதுமகனொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மூதூர் பெருவெளியைச் சேர்ந்த திரு. நைனாபிள்ளை இராஜன்(வயது 38) என்பவரே இச் சம்பவத்தில் சுட்டுக்கொல்லப் பட்டவராவர்.

# பஞ்சத்தை விசையாய் பயன்படுத்தி தமிழரை அழிக்க சிறிலங்கா சதி

(அலுவலக நிருபர்)

திரும்பிச் சென்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொல்லப்பட்டனர் மேலும் 12 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இராணுவத்தினர் வவுனியாவிலிருந்து உலங்குவானூர்தி மூலம் அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தீர்மானம் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத்முதலியும், ஜி.எம். பிரேமச்சந்திராவும் ஐக்கியதேசியக்கட்சி செயற்குழுவில் இருந்து நேற்றிரவு விலக்கப்பட்டனர்.

ஆனும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு ஐ. தே. கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறி கொத்தாவில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சுமார் 3000 ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் பங்கு கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிகின்றது.

இக் கூட்டத்தில் அண்மையில் கட்சியில் ஏற்பட்ட பிளவு பற்றியும், அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் ஆராயப் படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

டயப் பூசையைத் தொடர்ந்து 8 மணிக்குத் தேர் வலம்வர ஆரம்பமாகும்.

## மிதிவெடியில் சிக்கியதும் முகாம் திரும்பினர்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் காட்டுப் பகுதியைச் சுற்றி வளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் பலர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்ததால் தமது முயற்சியைக் கைவிட்டு முகாம் திரும்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை நிகழ்ந்துள்ளது. அன்றைய தினம் திருமலை மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம், பன்மதவாச்சி, பத்தாம் கட்டை ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் அக்காட்டுப் பகுதியில் தேடுதல் மேற்கொள்ள முயன்றனர்.

அச்சமயம் அப்பகுதியில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட ஐந்து மிதிவெடிகள் வெடித்துள்ளன. இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டு முகாமிற்குச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

## தீவகம், யாழ் நகரிலும் மீட்புநிதி செலுத்த ஒழுங்கு

14-09-91 சனிக்கிழமை தீவகத்திலும் 15-09-91 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் தமிழீழ மீட்புநிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளைச் சேர்ந்த தமிழீழ மீட்புநிதி செலுத்த விரும்புவோர் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசிய பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 'அ' 'உ' அட்டையை வைத்திருப்பவர்களுக்கு அரிசி, மா என்பன பங்கீட்டு அடிப்படையில் ரொக்கப் பணத்திற்கு வழங்கப்படவுள்ளது.

இன்று சனிக்கிழமை முதல் அரிசியின் விலை கிலோ ரூ. 13-80 சதமாகவும், மாவின் விலை கிலோவுக்கு ரூ. 12-25 சதமாகவும் இருக்கும், ப. நோ. கூ. சங்க முகாமையாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி விநியோகம் நடைபெறும்.

இந்த பங்கீட்டு முறைப்படி ஒரு குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் தலா ஒரு கிலோ அரிசி படியும், ஒரு அங்கத்தவரை கொண்ட குடும்பம் ஒன்றுக்கு இரண்டு கிலோ மாவும், இரண்டு அங்கத்தவராயின் மூன்று கிலோ மாவும், மூன்று அங்கத்தவராயின் நாலு கிலோ மாவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர் விபரம் திரட்டப் பணிப்பு

(நல்லூர்)

உலக வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க ஆசிரியர் உட்பட அனைத்துஅரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களின்விபரங்களைத்தயாரித்து உடனடியாக அனுப்பும்படி திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட மாகாணத் திணைக்கள அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

1991 ஆனி மாதச் சம்பளத்தின் அடிப்படையிலேயே இந்த விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பஞ்சத்தை விசையாய் பயன்படுத்தி தமிழரை அழிக்க சிறிலங்கா சதி

- கோ. மகேந்திரராசா

(அலுவலக நிருபர்)

எமது தேசத்தில் ஓர் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்து அதன் மூலம் ஓர் பொருளாதாரப் பஞ்சத்தை உருவாக்கி அதனையே விசையாகப் பயன்படுத்தி எமது மக்களை அழிக்க சிறிலங்கா அரசு முயல்கிறது. எமது தேசத்தில்அதுபட்டினிச் சாவுகளை எதிர்பார்த்து வாய் பிளந்து நிற்கிறது. இந்த நேரத்தில் வேதனையில் தவிக்கும் தமிழீழ தேசத்து மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஆறுதல் அளிக்கும் ஒன்றாக விளங்க வேண்டும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வன்செயல்களின் பாதிப்புகளை மதிப்பீடு செய்தலும்,



அவற்றுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளைஇனங்காணுதலுக்குமான ஆய்வுப் பட்டறையில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் கோ மகேந்திரராஜா தெரிவித்தார்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளுக்கு தீவைப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்திலுள்ள மூதூர் சீனன்வெளி என்னுமிடத்தில் சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக் கொலை

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழ்ப்பொதுமகனொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மூதூர் பெருவெளியைச் சேர்ந்த திரு. கையாயபிள்ளை இராஜன் (வயது 38) என்பவரே இச் சம்பவத்தில் சுட்டுக்கொல்லப் பட்டவராவர்.

## லலித் உட்பட 8 எம். பிக்கள் மனு தள்ளுபடி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்ததாக கூறிய மனுவில் கைச்சாத்திட்ட எட்டு ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் தம்மீது ஐ தே கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதை தடுக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை கொழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கருத்து வெளியிட்டால் எப்படி கட்சி விரோதமாகும்

- லலித்

(கொழும்பு)

ஒருவர் தனது கருத்துக்களை பகிரங்கமாக வெளியிட்டால் அது எப்படிக் கட்சிக்கு விரோதமான செயற்பாடாக இருக்க முடியும் என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கேள்வி எழுப்பியுள்ளார். கொழும்பில் நேற்று

(4 ஆம்பக்கம் பார்க்க)

# மணலாற்றில் அகோர குண்டுவீச்சு கடும் மோதல்; 35 பொதுமக்கள் பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் இரவு பகலாக இடைவிடாத சண்டை தொடர்ந்தவண்ணம் உள்ளது சிறிலங்காவிமானப் படையின் ஹெலிக்கொப்ரர்களும், குண்டுவீச்சு விமானங்களும் பாரிய குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்திவருகின்றன. இராணுவத்தினர் முல்லைத்தீவு- மணலாறுமாவட்டத்தின்எல்லைப்பகுதிகளில் உள்ள காடுகளுக்குள் முன்னேறும் முயற்சியில் தமது முழுப்பலத்தையும் திரட்டித் தாக்கி வருகின்றனர். நெடுங்கேணிப் பகுதியைக் குண்டு வீச்சு விமானங்கள் அழித்து வருகின்றன.

கடந்த சனிக்கிழமையில் இருந்து இராணுவம் இந்த முழு அளவிலான தாக்குதலை நடாத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. யுத்தத்தில் இராணுவம் பலத்த எதிர்ப்பைச் சந்திப்பதனால் தனது குண்டுவீச்சுத் தாக்குதலைப் பல்வேறு இடங்களுக்கும் பரவலாக்கியுள்ளது.

விமானத்தாக்குதல்கள் பற்றி சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் கூறும்போது புலிகளுக்கு கடந்த காலங்களில் ஆதரவா

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு போரில் எட்டு புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் மேலும் எட்டு வீரவேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

டார்ளி (மரிய கொறற்றி ஜோசப் சக்கோட்டை, அல்வாய்)பாபு(தங்கவடிவேல்சசிகு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மகாநாயக்கர் சமாதான முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள பிளவைச் சரி செய்ய மகாநாயக்க தேரோக்கள் முயற்சி செய்துவருகின்றனர்.

தேரோக்கள் முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியையும், ஜி.எம். பிரேமச்சந்திராவையும் மற்றும் காமினி திஸநாயக்காவையும் கண்டிக்கு வருமாறு அழைத்துள்ளனர். இந்த அழைப்பையேற்று இன்னும் ஒரு சில தினங்களில் லலித்தும், காமினியும் கண்டிக்குச் செல்வார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டிருக்கிறது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
28 - 02 - 1934

மறைவு
08 - 08 - 1991

திதி
07-09-1991

### கந்தையா தங்கராஜா
(முன்னாள் பட்டினசபை ஊழியர் கிளிநொச்சி)

எல்லோர்க்கும் நல்லவற்றை செய்து வந்த எங்கள்
நல்லாரே நாங்களிங்கே வாடுகின்றோம் உம் பிரிவால்
பட்டினசபையினிலே கடமை புரிந்து நல்ல
பட்டமும் பெற்றுப் பெருமையடைந்திருந்தீர்
மனைவி மக்கள், மருமக்கள் உறவினர்கள்
அனைவரும் வாடுகின்றோம் - நீர் வரும் நாளென்
நாளோ?

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் உற்றார் உறவினர் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

4ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.

(R-1710)

---

யாழ் / வடமராட்சி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

## மஹோற்சவம் 1991

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 08-09-91 | ஞாயிறு |
| தேர்: | 22-09-91 | ஞாயிறு |
| சமுத்திரதீர்த்தம்: | 23-09-91 | திங்கள் |
| கேணித் தீர்த்தம்: | 24-09.91 | செவ்வாய் |

வாகனப் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக உற்சவங்கள் மாலை 5.00 மணிக்கு நிறைவு பெறும்.

- தர்மகர்த்தா சபை -

(R/1708)

---

## 41 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

வீரஜனனம்
22-6-1976



வீரமரணம்
29-7-1991

### வீரவேங்கை செனித்
குமாரசாமி திருவேரகன் (திரு)

ஈழ சுதந்திர வேள்வியில் - புலித்
தோழர்கள் தொடங்கிய யாகத்தில்
மலரும் தமிழ் ஈழத்திற்காக
தமிழ் ஈழமக்களை நேசித்தாய் திரு
தன்னலம் கருதாது தமிழீழ மண்ணைப் பூஜித்தாய்
ஆதலினால் மரணத்தை யாசித்தாய் திரு
வீழ்ந்தாலும் வித்துக்களாக
மடிந்தாலும் மக்களுக்காக.

(ஆனையிறவு மோதலில் வீரமரணம் அடைந்த சக போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்)

ஏழாலை வடக்கு
ஏழாலை

(R/1711)

ஞா. குமாரசாமி
உற்றார், உறவினர்கள்

---

## வரி விளம்பரம்

**அரசாங்க எழுதுனர்சேவை**

போட்டிப் பரீட்சைக்கான சனி ஞாயிறு பயிற்சி வகுப்புகள் 8-9-91, 1-30 மணிக்கு ஆரம்பமாகும் விண்ணப்பப்பத்திரத்தையும் விபரக்கொத்தினையும்எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்முழுக்கட்டணம் 275/- School of Business Administration 16 3rd Cross Street, Jaffna (B/3068

## அடையாளம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

உரும்பராயைச் சேர்ந்த செல்லையா வல்லிபுரம் என்பவரது அடையாள அட்டையுடன் கூடிய பேர்ஸ் ஒன்று த. நடேசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## மட்டக்களப்பிற்கு எதிர்க்கட்சிக் குழு

(கொழும்பு)

இந்த மாதம் 14ஆம் திகதி எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு மட்டக்களப்பு மாவட்டத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு, புனர்அமைப்புத் திட்டங்கள் தொடர்பாகவும், சிவில் நிர்வாகம் தொடர்பாகவும் அரசாங்க அதிபர் க. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

## விண்ணப்பதாரிகள் காசுக்கட்டளை அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

கிராம சேவையாளர்களுக்கான விண்ணப்பதாரிகள் தபால் கந்தோர் மூலமும் காசுக்கட்டளையைப் பெற்று அனுப்பலாம் என மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

முன்னர் வங்கி மூலமாக மட்டுமே பற்றுச் சீட்டைப் பெற்று அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வங்கிஒருமணிநேரம்மட்டுமே செயல்படுவதால் விண்ணப்பதாரிகள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பதாரிகள் இப்பற்றுச் சீட்டின் ஒரு மூலையை மட்டும் ஒட்டி (கழற்றக் கூடியதாக) அனுப்பிவைத்தல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

## தேசிய அடையாளஅட்டை புதுப்பித்தல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பிக்கும் வேலை யாழ். மாவட்டத்தில் சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் ஆரம்பமாகியுள்ளது.

இதன்படி கடந்த 73ஆம் ஆண்டு தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றவர்களுக்கே தற்போது புதிய விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

கடந்த 7வருடங்களின் முன் மாற்றப்பட வேண்டிய மேற்படி அடையாள அட்டைகள் இவ்வளவு காலமும் மாற்றப்படாது தற்போது பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் அவசரப்பட்டு இவற்றைப் புதுப்பிக்குமாறு வற்புறுத்துவது ஏனோ என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

தற்போது புகைப்படம் பிடிக்கவும் முத்திரைக்கும் அறுபத்தைந்து ரூபாவிற்கு மேல் செலவு ஏற்படுவதாகவும் தெரியவருகின்றது.

(ச)

---

## 31-ம் நாள் வீர அஞ்சலி



---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

---

## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 07





தன்னலம் கருதாது தமிழீழ மண்ணைப் பூஜித்தாய்
ஆதலினால் மரணத்தை யாசித்தாய் திரு
வீழ்ந்தாலும் வித்துக்களாக
மடிந்தாலும் மக்களுக்காக.
(ஆனையிறவு மோதலில் வீரமரணம் அடைந்த சக போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்)

ஏழாலை வடக்கு — ஞா. குமாரசாமி
ஏழாலை (R/1711) உற்றார், உறவினர்கள்

வாகம் தொடர்பாகவும் அரசாங்க அதிபர் க. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



## வீரவேங்கை திசா

(ஸ்ரீதரன் (பாபு) சிவபாதலிங்கம்)
இரணை இலுப்பைக்குளம் - வவுனியா

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 09 10-1974 | 07-08-1991 |

"ஈழமது அமைக்காமல்
ஈன்ற தாய் முகம் பாரேன்
தனி நாடு அமைக்காமல்
தாயின் கைச் சோறுண்ணேன்"
என்றகவிப் புறப்பட்ட
ஈழ மண்ணின் அடலேறே ... !
அடங்காத் தமிழன் தான்
ஈழத் தமிழன் என்ற
அறச் சொற் கோவை தனை
நெறிப் படுத்திச் சென்றுவிட்டாய்

வீட்டுக்கொரு வீரன்
நாட்டுக்குத் தேவையம்மா
சென்று வருகின்றேன்
மகிழ்ச்சியுடன் விடை கொடுங்கள்
என்று விடை வேண்டி
வேட்கையுடன் புறப்பட்டாய்
ஆனையிறவினிலே உன் வேட்கை தீர்ந்ததுவோ... !
நீ கொண்ட இலட்சியத்தால் பெருமை ஒருபக்கம்
உன் இதய பாசத்தால் துயரம் மறு பக்கம்
உன் ஆத்ம சாந்திக்காய் இறை பக்கம் வேண்டி
நிற்கும் ... ... ... ...

அப்பா, அம்மா, அண்ணா, தம்பி,
தங்கைகள் மற்றும் பேரன், பேர்த்தி,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
மாமாமார், மாமிமார் மற்றும்
உறவினர்கள்.

சி. சிவகுமார்
சூராவத்தை,
சுன்னாகம் (B/3050)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## லெப்டினன்ட் மாக்ஸ்

(பத்மநாதன் சசிகுமார்)
தட்சனாமருதமடு

வீரஜனனம்:- 06-05-1970
வீரமரணம்:- 20-05-1989



## வீரவேங்கை மாக்ஸ்

(பத்மநாதன் ராஜ்குமார்)
புளியம்பொக்கணைச் சந்தி,
பெரியகுளம்

வீரஜனனம்:- 07-05-1972
வீரமரணம்:- 08-08-1991

இணை பிரியா சகோதரர்களே
சசிகுமாரா! ராஜ்குமாரா!
தமிழினத்தின் விடிவிற்காக
தம்பி பிரபாவின்
தலைமையின் கீழ்ச் சென்று
தலைமைக்காகப் போராடாது
தலைமுறைக்காகப் போராடி
உயிர் தமிழிற்காகவும்
உடல் மண்ணிற்காகவும்
வாழ்ந்து சென்றீர்களே
வளரும் தமிழீழ மீட்புப்பணி
மலரும் தமிழீழம்
மலர்க உங்கள் மனச்சாந்தி.

இவ்வண்ணம்.
உங்கள் பிரிவால் வாடும்
பெற்றோர், அருமை அண்ணன்,
சித்தப்பாமார், சித்திமார்,
மாமிமார், பேர்த்தி.

புளியம்பொக்கணைச் சந்தி,
பெரியகுளம்,
கண்டாவளை. (R/1707)

# நினைவு கூருகின்றோம்...

1991-09-07



லெப்.சிறி
டைகர்தேவன்



மேஜர்சந்திரன்/
வள்ளுவன்

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் தம்பனையில் வீரமரணமெய்திய
**கொலின்ஸ்/லூக்** (கன்னாட்டி)

மாங்குளத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட
**அமல்** (தம்பையா ராசேந்திரம் - வவுனிக்குளம்)

1988ஆம் ஆண்டு செட்டிக்குளம் ஆண்டியாப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
**யோகசிவம்** (அழகர் பரமநாதன் கணேசமூர்த்தி- நீலியம்மோட்டை, மன்னார்)

நாளங்குடாவில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
**லெப்.சிறி/டைகர் தேவன்** (தம்பிப்பிள்ளை செந்தில்நாதன் - புதூர், மட்டக்களப்பு)

இதே சம்பவத்தில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
**மேஜர் சந்திரன்/வள்ளுவன்** (காத்தமுத்து சிவஜெயம் அமிர்தகழி - மட்டக்களப்பு)

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரமரணமெய்திய
**அருள்** (வேலுப்பிள்ளை சுகுமார் - மருதோடை, நெடுங்கேணி)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3071)

### சிந்தனைக்கு

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர் துறப்போர் ஒருநாளும் தோற்பதில்லை.

— பைரன் பிரபு

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 07-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 3208
த. பெ. இல 95

## பகடைக் காய்களாக இலங்கைத் தமிழர்

தமிழ்நாடு-வேலூரில் அண்மையில் நடத்தப்பட இருந்த தமிழர் மாநாடு ஒன்றிற்கு தமிழக பொலிஸார் தடை விதித்துள்ளதோடு அதில் கலந்து கொள்ளச் சென்றவர்களையும் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் முற்றிலுமாக தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாகும்.

இம்மாநாடு தமிழீழத்திற்கு ஆதரவானதெனவும், இலங்கைத் தமிழருக்கு சாதகமானதெனவும் மாநாட்டு தடைக்கான உத்தரவிற்கும், கைதுக்கான உத்தரவிற்கும் காரணம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் தற்பொழுது தமிழகத்தில் நடைபெறவிருந்த மாநாட்டைவிட மிகப் பெரிய அளவில், பல்கலைக்கழக மட்டத்தில், சர்வதேச ரீதியாக அறிஞர்கள் கலந்து கொண்ட தமிழீழ ஆய்வு மாநாடு ஒன்று கலிபோர்னியாவில் இடம்பெற்றது. இந்த மாநாட்டை நிறுத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கமும், அமெரிக்காவில் வாழும் சிங்களவரும் எவ்வளவோ முயற்சித்தும், மிரட்டியும் பலன் ஏதும் இடைக்கவில்லை. மாறாக, பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டது.

ஆனால், தமிழகத்தில் மாநாடு கூட்டுவதற்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் போன்றே தமிழரின் போராட்டத்திற்கான நியாயத்தைப் பரவவிடாது தடுப்பதில் தமிழக அரசு தற்பொழுது தீவிர கவனம் செலுத்துகின்றது.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மீது நெருக்கடிகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ள தமிழக அரசு தற்பொழுது தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழருக்கு ஆதரவான சக்திகளை ஒழித்துக்கட்டுவதில் தீவிர அக்கறை காட்டுகின்றது.

இதனை உணர்த்துமாப்போல் இலங்கைத் தமிழருக்கு

## சிறிலங்கா இராணுவத்தினரால்

# மகிழடித்தீவு, முதலைக்குடாவில் 67 பேர் கொல்லப்பட்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மகிழடித்தீவு கிராமம், முதலைக்குடா கிராமம் ஆகியவற்றில் கடந்த யூன் மாதம் 12 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 67 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

மகிழடித்தீவில் 46 பேரும் முதலைக்குடாவில் 21 பேரும் படுகொலை செய்யப்பட்டனர் இவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

### மகிழடித்திவு கிராமம்

- ★ வேலாச்சி வள்ளியம்மை (63)
- ★ கதிராமப்போடி ஞானமுத்து (70)
- ★ அழகிப்போடி ரேவதி (28)
- ★ செல்வராசா பவானி (11)
- ★ அருணாசலம் தர்சனா (01)
- ★ ஞானமுத்து குருகுலசிங்கம் (32)
- ★ சண்முகம் புவனேஸ்வரி (25)
- ★ குருகுலசிங்கம்ருவவதனி (09)
- ★ குருகுலசிங்கம் நிசாந்தன் (06)
- ★ குருகுலசிங்கம் சுகந்தன் (03)
- ★ குருகுலசிங்கம் அகலிகா (01)
- ★ மாமாங்கம் மகேஸ்வரி (38)
- ★ சின்னவப்போடி சின்னமுத்து (70)
- ★ கணபதியார் நல்லம்மா (66)
- ★ கனகரெத்தினம் யுகயாழினி (02)
- ★ சிவஞானம் ஜெயராம் (13)
- ★ நல்லதம்பி சுப்பிரமணியம் (73)
- ★ குமாரசிங்கம் சாந்தலிங்கம் (28)
- ★ அழகிப்போடி குணமணி (29)
- ★ இராமலிங்கம் சிவமணி (20)
- ★ சபாரெத்தினம் சுதாகரன் (06)
- ★ சின்னவப்போடி யோகநாதன் (18)
- ★ பிள்ளையான்குட்டி ரஜனி (3 மாதம்)
- ★ பொன்னம்பலம் சிதேவிப்பிள்ளை (36)
- ★ நாகலிங்கம் விநோதகுமாரி (07)
- ★ மாமாங்கம் ஜெயந்திமலர் (27)
- ★ பாக்கியராசா சுதாகரன் (09)
- ★ குபேந்திரராசா சுதாகரன் (06)
- ★ குபேந்திரராசா நர்மலாதேவி (02)
- ★ பரமலிங்கம் கங்கா (04)
- ★ கந்தப்பன் பரமேஸ்வரி (37)
- ★ நடராஜா சுபாஜினி (09)
- ★ நடராஜா யோகேஸ்வரன் (07)
- ★ கந்தப்பர் புண்ணியவதி (33)
- ★ தட்சணாமூர்த்தி சசிகரன் (05)
- ★ இளையதம்பி தங்கம்மா (50)
- ★ நல்லதம்பி கமலகலாதேவி (20)
- ★ புவனகேசரி வேணுகரன் (6 மாதம்)
- ★ யோகராஜா ஸ்கந்தராசா (03)
- ★ கிருஷ்ணபிள்ளை பவானி (07)
- ★ சுப்பிரமணியம் சிவநேசராசா (28)
- ★ கணபதிப்பிள்ளை சோமசேகரம் (34)
- ★ வைரமுத்து மூத்ததம்பி (65)
- ★ கருணாநிதி மலர்விழி (14)
- ★ அருளம்பலம் பிறேமலதா (03)
- ★ அருளம்பலம் பிறேமசசிகலா (03)

### முதலைக்குடா கிராமம்

- ★ சபாபதி. சந்தோஷம் (42)
- ★ வேலாப்போடி அரியநாயகம் (42)
- ★ வைரமுத்து குழந்தைவேல் (44)
- ★ இளையதம்பி வேலாப்போடி (43)
- ★ கிருஷ்ணபிள்ளை மகேந்திரமூர்த்தி (32)
- ★ தங்கம்மா சின்னத்தம்பி (36)
- ★ தம்பிப்பிள்ளை கந்தையா (35)
- ★ காத்தியான் இராஜேந்திரன் (27)
- ★ வேலாப்போடி சின்னக்கிளி (30)
- ★ சுப்பிரமணியம் தெய்வநாயகம் (31)
- ★ வேலாப்போடி தில்லையம்பலம் (40)
- ★ நாகமுத்து குழந்தைவேல் (45)
- ★ குழந்தைவேல் சந்திரசேகரம் (17)
- ★ கேதாரபிள்ளை செளந்திரராசா (16)
- ★ மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் (48)
- ★ கணபதிப்பிள்ளைகோபாலபிள்ளை (35)
- ★ கந்தசாமி ரவீந்திரன் (27)
- ★ இளையதம்பி தங்கவேல் (29)
- ★ வைரமுத்து கணபதிப்பிள்ளை (60)
- ★ பசுபதிப்பிள்ளை (22)
- ★ வைரமுத்து இராசநாயகம் (42)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கலந்துரையாடல் கொக்குவிலில் உள்ள தமிழர் புனர்வாழ்வு கழக கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் பல்கலைக்கழக துணைவேந்தர், விரிவுரையாளர்கள் செயலக அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வுப் பட்டறையில் தொடர்ந்து உரையாற்றிய பிரதிக் கலைஞர் இன்று இந்த மண்ணில் ஒருசோகமான துயரமான அத்தியாயம் நடந்து கொண்டிருக்கிறது. மனிதத் தன்மையை முற்றாகவே இழந்து விட்ட பேரினவாத அரசு தமிழ் தேசிய இனத்தின் மீது மிகக்கடுமையான அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த அடக்கு முறையையும் வன்முறையையும் ஆளும் வடிவமாகக் கொண்டுள்ள சிறிலங்கா அ...

...யும் செய்யும். சில நாட்களில் தமிழ் மண்ணில் பொது நிறுவனங்களின் செயற்பாடுகள் தடைசெய்யப்படலாம். உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வருவதை அரசு முற்றாக நிறுத்தும். அந்நேரத்தில் உதவிகள் மறுக்கப்பட்ட இந்த மக்கள் பட்டினிச்சாவைச் சந்திக்க வேண்டிவரலாம்.

எனவேதான் நிவாரணங்கள் மூலம் வாழும் மக்களை உருவாக்காமல் தானாகவே வாழும் சமூகத்தை உருவாக்கும்படி உங்களிடம் நான் கேட்கிறேன். பொதுவாக புனர்வாழ்வுக்கும் நிவாரணத்துக்கும் இடையேயான கருத்து ரீதியான வேறுபாட்டை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒரு மனிதன் அல்லது சமூகம் தான் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இருந்து முற்றாக விடுபட்டு தனது வாழ்வை மறுசீரமைத்துக் கொள்வதை புனர்வாழ்வென ஓரளவு வரையறுத்துக் கொள்ளலாம்.

முயற்சித்தும், மிரட்டியும் பலன் ஏதும் கிட்டவில்லை. மாறாக, பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டது.

ஆனால் தமிழகத்தில் மாநாடு கூட்டுவதற்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் போன்றே தமிழரின் போராட்டத்திற்கான நியாயத்தைப் பரவவிடாது தடுப்பதில் தமிழக அரசு தற்பொழுது தீவிர கவனம் செலுத்துகின்றது.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மீது நெருக்கடிகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ள தமிழக அரசு தற்பொழுது தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழருக்கு ஆதரவான சக்திகளை ஒழித்துக்கட்டுவதில் தீவிர அக்கறை காட்டுகின்றது.

இதனை உணர்த்துமாப்போல் இலங்கைத் தமிழருக்கு உதவ வேண்டாம், புகலிடம் அளிக்க வேண்டாம் என பிரசாரமும், எச்சரிக்கையும் தமிழக அரசினாலும், பொலிஸாரினாலும் செய்யப்பட்டு வருகின்றது.

1983 இல் இலங்கையில் இனப்பிரச்சினை வெடித்த போது தனது அரசியல் இலாபத்திற்காக அகதிகள் வருகையை இந்தியா அனுமதித்தது. பின்னர் 1987 இல் இலங்கைத் தமிழரை அவர்களது தாயகத்தில் வைத்தே படுகொலை செய்தது. மீண்டும் 1990 இல் அனுமதித்தது. தற்பொழுது நெருக்குதல் கொடுக்கின்றது. இவ்வாறாக தனது தேவைகளுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்ப இலங்கைத் தமிழரைப் பயன்படுத்தி வந்த இந்திய அரசாங்கமும் தமிழக அரசும் தற்பொழுது இலங்கைத் தமிழர்மீது சர்வதேச வரன்முறைகளையும் மீறிச்செயற்பட முனைகின்றது.

தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போன்று இந்தியாவும் - தமிழ் நாடும் புலிகளைப் பகடைக் காய்களாக வைத்து தமது அரசியல் சதுரங்க ஆட்டங்களை நடத்துகின்றன. தமிழ் நாட்டு மக்களை எமது இயக்கத்திற்கு எதிராகவும், எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராகவும் திருப்பிவிட இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் திட்டமிட்டுச்செயற்படுகின்றன. எமது இயக்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த திட்டமிட்ட ரீதியில் விஷமப் பிரசாரம்மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனினும் தமிழ் நாட்டில் பரந்துபட்ட மக்கள் எமது இயக்கத்திற்கும், போராட்டத்திற்கும் ஆதரவாக இருக்கின்றார்கள். இந்த மக்களின் ஆதரவு இருக்கும் வரை எமது போராட்டத்திற்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை.

உலகின் எப்பகுதியிலும் அரசியல்வாதிகளின் விருப்பிற்கேற்ப மக்களும் அவர்களின் உணர்வுகளும் செயற்படுவதில்லை. இதனால், இலங்கைத் தமிழருக்கும், தமிழக மக்களுக்குமிடையேயுள்ள நெருங்கிய உறவை எவரும் பிரித்து விடமுடியாது. இந்நிலையில் "இந்து" பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போன்று தமிழக மக்களின் ஆதரவு புலிகளுக்கு இருக்கும் வரை அவர்கள் பீனிக்ஸ் பறவைகள் போன்றே இருப்பார்கள் தமது சாம்பலில் இருந்து அவர்கள் உயிர்த்தெழுவார்கள்.

---

★ ... (33)

★ தட்சணாமூர்த்தி சசிகரன் (05)

★ இளையதம்பி தங்கம்மா (50)

★ நல்லதம்பி கமலகலாதேவி (20)

★ புவனேசுவரி வேணுகரன் (6 மாதம்)

★ யோகராஜா ஸ்கந்தராசா (03)

★ கிருஷ்ணபிள்ளை பவானி (07)

... ராசா (16)

★ மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் (48)

★ கணபதிப்பிள்ளைகோபாலபிள்ளை (35)

★ கந்தசாமி ரவீந்திரன் (27)

★ இளையதம்பி தங்கவேல் (29)

★ வைரமுத்து கணபதிப்பிள்ளை (60)

★ பசுபதிப்பிள்ளை (22)

★ வைரமுத்து இராசநாயகம் (42)

---

லக அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வுப் பட்டறையில் தொடர்ந்து உரையாற்றிய பிரதிக் கலைஞர் இன்று இந்த மண்ணில் ஒரு சோகமான துயரமான அத்தியாயம் நடந்து கொண்டிருக்கிறது. மனிதத் தன்மையை முற்றாகவே இழந்து விட்ட பேரினவாத அரசு தமிழ் தேசிய இனத்தின் மீது மிகக்கடுமையான அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த அடக்கு முறையையும் வன்முறையையும் ஆளும் வடிவமாகக் கொண்டுள்ள சிறிலங்கா அரசிற்கு எமதுமக்கள் பல வழிகளிலும் முகம்கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

அரசபயங்கரவாதத்தின் விளைவுகளால் இன்றைய சமுதாய வாழ்க்கைச் சூழல் பெரிதும் மாற்றங்கண்டுள்ளது. பெருமளவிலான தமிழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களையும், உறவுகளையும் உடைமைகளையும் இழந்து வந்து நிற்கிறார்கள். குடும்ப உறவுகள் பெருமளவில் சிதைந்து விட்டன.

வாழ்விடமின்மை, வறுமை, வேலையின்மை ஆகிய சுமைகள் தமிழ்ச் சமுதாயத்தின் கழுத்தை பலமாகவே நெரிக்கின்றன. தொழில் நிலைகள் இராணுவ ஆக்கிரமிப்பு வலையங்களாக இருப்பதால் சமுதாயத்தின் பொருளாதார, உயிர் வாழ்வு முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களின் பொருளாதார சமூகவாழ்வை விடுவித்து உன்னதமான வாழ்வோட்டத்தை அமைக்க வேண்டும் என நான் உங்களிடம் கூறவில்லை. தொடரும் நெருக்கடியான வாழ்வுச் சூழலிலேயே தனி மனிதனொருவன் தன் வாழ்வுத் தேவைகளை நிவர்த்திக்கக்கூடியதாகவும் பாதிக்கப்பட்டுள்ளோர் பிறரை விழித்து நிற்காது தாமே இயங்கும் தன்மையைப் பெற வழி செய்யக்கூடிய செயற்திட்டங்களை வகுக்க வேண்டும் என விரும்புகிறேன்.

தமிழினத்தின் அழிவிற்காக சிங்கள பேரினவாத அரசு தன்னாலியன்ற அனைத்தையும் வேதான் நிவாரணங்கள் மூலம் வாழும் மக்களை உருவாக்காமல் தானாகவே வாழும் சமூகத்தை உருவாக்கும்படி உங்களிடம் நான் கேட்கிறேன். பொதுவாக புனர்வாழ்வுக்கும் நிவாரணத்துக்கும் இடையேயான கருத்தியலான வேறுபாட்டை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒரு மனிதன் அல்லது சமூகம் தான் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இருந்து முற்றாக விடுபட்டு தனது வாழ்வை மறுசீரமைத்துக் கொள்வதை புனர்வாழ்வென ஓரளவு வரையறுத்துக் கொள்ளலாம். ஆனால் எங்கள் தேசம் பயங்கரவாதப் பிடியிலிருந்து இன்னும் விடுபடவில்லை அழிவும் நிச்சயமற்ற பொருளாதார சமூக வாழ்வும் எங்கள் சமூகத்தைத் தொடர்ந்து வந்தபடியேயுள்ளன ஆகவே தற்போதையபாதிக்கப்பட்ட சூழ்நிலையிலேயே எங்கள் தேசத்தில் சுயமாக வாழக்கூடியதொரு நிலையை பாதிக்கப்பட்ட மக்களிடையே ஏற்படுத்த வேண்டும். தற்போது தோற்றம் பெற்றிருக்கும் புதிய சமூக வடிவமைப்புக்கு ஏற்றமாதிரி பயனுள்ள அர்த்தமுள்ள செயற்திட்டங்களை நாம் வகுக்க வேண்டும்.

இதேவேளை பேரினவாத அரசின் இன ஒழிப்பின் விளைவுகளால் தோற்றம் பெற்ற விதவைப் பெண்கள், அநாதைப்பிள்ளைகள் ஆகியோர் தமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு உதவுவதையும் குழந்தைகள்,கர்ப்பிணிப்பெண்கள் ஆகியோரின் உடல் உள வளர்ச்சிக்கான செயற்திட்டங்களுக்கு உதவுவதையும் நாம் உடனடியாகக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என்றவகையில் நீங்கள் நீண்ட அனுபவங்களைப் பெற்றவர்கள் தங்களின் அனுபவங்களின் கருத்துப் பரிமாற்றங்களினூடாக பாதிக்கப்பட்ட மக்களிற்கான வேலைத்திட்டங்களை சரியான திசைவழியில் அழைத்துச் செல்ல முடியும் என நம்புகிறேன். பொதுவாக செயற்திட்டக் குறைபாடுகளும் வேலைக்குறைபாடுகளும் மலிந்து போய்க்கிடக்கின்றன. இவற்றிற்கு பொது நிறுவனங்களின் செயற்பாடுகள் விதிவிலக்கானவை அல்ல.

உதாரணத்திற்குச் சொல்வதானால், பல பக்கங்களாலும் வழங்கப்படும் நிவாரணங்கள் ஏழை-வறிய மக்களைப் பெரிதும் சென்றடைவதில்லை. ஓரளவு அறிவுள்ள, நிவாரணங்களை எவ்வாறு பெறலாமென்பதை தெரிந்துவைத்துள்ளவர்களுக்கே எல்லாப் பக்கத்தாலும் நிவாரணக் கொடுப்பனவுகள் திரும்பத் திரும்பச் செல்லும். உண்மையில் கொடுக்கப்பட வேண்டிய ஏழை, வறிய மக்கள் பலராலும் பல வழிகளாலும் ஏமாற்றப்பட்டு விடுவார்கள். பெரும்பாலான நிவாரணங்களைப்பற்றி இவர்கள் அறிவதே இல்லை. இந்த நிலையில், உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களையும் உதவிதேவைப் படுபவர்களையும் அறியாமலேயே நாம் இருந்து விடுகிறோம்.

இன்று, தமிழீழத்தேசம் எங்கும் அரச வன்முறையால், பாதிக்கப்பட்ட மக்கள், பரந்து போய் நிற்கிறார்கள் இந்த நிலையில், எங்கு?யார்? என்ன உதவிகளைச் செய்கிறார்கள், என்னவேலைத்திட்டங்களைச் செய்கிறார்கள் என்பது எவருக்குமே சரியாகத் தெரியாது. இதனால்ஒருவருக்குத் திரும்பத் திரும்பப் பல பக்கங்களாலும் உதவிகள் வந்து சேருகின்றன. இதேநேரம் வேறு சிலருக்கு எந்தவிதமான உதவியுமே கிடைக்காமல் போய்விடுகின்றது இக்குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டியவையாகும்.

அரச சார்பற்ற பொது நிறுவனங்கள் தம்மிடையே வேலைகளை, பங்கீடு செய்வதன் மூலம் இக்குறைபாடுகளைத் தீர்க்கலாம்.

இதற்கு, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள தகவல் வங்கியைப் பெரிதும் பயன்படுத்தலாம்.

பாதிக்கப்பட்ட மக்களின் முழுமையான தகவல் சேகரிப்பு மைய நிலையமாக - தகவல் வங்கியைப் பலப்படுத்துவதால் சகல விபரங்களையும் இலகுவாகப் பெறக்கூடியதாக இருக்கும் இதனால், பாதிப்புக்களையும்-உடனடியாகச் செய்யப்பட வேண்டிய நிவாரணப் பணிகளையும் அடையாளம் காணலாம். இதிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் வேலைத் திட்டங்களை நிரல்படுத்த வேண்டும்.

செயற்படுத்த வேண்டிய செயற் திட்டங்களை அரச சார்பற்ற பொது நிறுவனங்களிடையே பகிர்ந்து கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்டு ஆதரவற்று நிற்கும் மக்களின் வாழ்வு இயக்கத்திற்கு நாம் வழி செய்பவராவோம். இந்த நேரத்தில் தவறான சில முன்னுதாரணங்களை நாம் கைவிட வேண்டும். போசாக்கின்மை என்பது எங்கள்தேசத்தைவிட எரித்திரியா, எதியோப்பியா போன்ற நாடுகளில் உண்மையில் அதிகமானது தான். ஆனால் இங்கு ஒப்பீடு தவறானதாகிறது. எமது சமூக வாழ்வை- விஞ்ஞானரீதியான உடலியற் தேவைகளுடன் ஒப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-09-30ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால்பெற்றுக்கொள்ளப்படும்.

1. தாவரவியல்-சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்II/ உதவி விரிவுரையாளர்.

2. தற்காலிக உதவி விரிவுரையாளர் (கணனி விஞ்ஞானம்)

சம்பள அளவுத்திட்டம்:

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்1-ரூபா 9,600-8x250 - 11,600/- மாதமொன்றுக்கு

2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 - ரூபா 8,000-5x250-9,250/- மாதமொன்றுக்கு

3 உதவி விரிவுரையாளர் - ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது ஒரு வருடத்திற்கு.

4 தற்காலிக உதவி விரிவுரையாளர் - ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய


காவிரி நீர்ப்பிரச்சினை

# கர்நாடகத்துடன் பேசும் உத்தேசம் தமிழ்நாட்டிற்கில்லை - ஜெயலலிதா

(சென்னை)

காவிரிநதி நீர்ப் பிரச்சினை தொடர்பாக கர்நாடக அரசுடன் பேசும் உத்தேசம் தமிழ்நாட்டு அரசுக்கில்லை என்பதை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெளிவாகக் கூறியுள்ளார்.

நேற்று சட்டப்பேரவையில் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்டுருட்டி ராமச்சந்திரன், காவிரிநதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றத் தீர்ப்பு வரும்வரை இடைக்கால நடவடிக்கையாக கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என்று உச்சநீதி மன்றம் ஆலோசனை வழங்கியிருப்பது தொடர்பாக எழுப்பிய பிரச்சினைக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காவிரிநதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றத்தினால் தான் சரியான தீர்ப்பு வழங்க முடியும் என்பது தமிழ்நாட்டின் நிலை. என்றாலும், இதில் எந்த விதமான மாற்றமும் இல்லை என்று தெளிவுபடுத்தினார்.

கர்நாடக அரசுடன் இதற்கு முன்னர் நடத்திய பேச்சுவார்த்தைகளினால் எந்த விதப் பயனும் ஏற்படவில்லை என்பதால், தமிழக அரசு பேச்சுவார்த்தைக்குத் தயாராக இல்லை என்றார் அவர்.

தமிழக அரசின் நலனைப் பாதிக்கும் வகையில் கர்நாடக அரசு அவசர சட்டம் பிறப்பித்ததையும் செல்வி ஜெயலலிதா சுட்டிக் காட்டினார். தமிழக அரசின் வழக்கறிஞர்கள் மூலம் தமிழக அரசின் நிலை தெளிவாக உச்ச நீதிமன்றத்துக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தப்பான துணிச்சலுடன் எதையும் செய்யக் கூடாது - பாக். இந்தியா எச்சரிக்கை

(டில்லி)

தப்பான துணிச்சலுடன் எதுவும் செய்யக் கூடாது என இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் பாகிஸ்தானை எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் லோக்சபாவில் பேசிய சரத்பவார் பூஞ்ச் நகரில் பாகிஸ்தான் இந்தியாவிடம் சரியான முறையில் பாடம் படித்துள்ளது என்றும் அந்தப் பகுதியில் இப்போது அமைதி நிலவுகின்றது என்றும் தெரிவித்தார்.

இந்தியா போரை விரும்பவில்லை என்றும், சீனா உட்பட அனைத்து அயல் நாடுகளுடனும் உறவுகளை மேம்படுத்தவே இந்தியா விரும்புகின்றது என்றும் சரத் பவார் தெரிவித்தார்.

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பம் இடாது என்றும் இந்தியாவின் நலனுக்கு ஏற்றதாக இந்த ஒப்பந்தம் அமையாததால் இதில் கையெழுத்திடாது என்றும் அவர் தெரிவித்தார்.

## 8 மீனவரைக் காணவில்லை

சென்னை)

புதுக்கோட்டை மாவட்டம் ஜகதாப்பட்டினத்தில் இருந்து கடந்த புதன்கிழமை இரண்டு படகுகளில் சென்ற எட்டு மீனவர்களை காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## குடியரசுகளை ஆலோசித்தே வெளியுறவுக் கொள்கை

சோவியத் யூனியனின் வருங்கால வெளியுறவுக் கொள்கை குடியரசுகளின் ஆலோசனை கலந்துதான் தயாரிக்கப்படும் என்று சோவியத்தின் வெளியுறவு அமைச்சர் பொரிஸ் பான்கின் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பொரிஸ் பான்கின் சோவியத் யூனியன் இனி லட்சிய அடிப்படையை கருத்தில் கொள்ளாது என்றும், வாணிப, சர்வதேச உறவுகள் அடிப்படையில் பல நாடுகளுடன் தொடர்புகளை பரிசீலிக்க மொஸ்கோ எண்ணியுள்ளது என்றும் தெரிவித்தார்.

மணலாற்றில்

கச் செயற்பட்டு வந்த நெடுங்கேணி கிராமத்தின் மீது தாம் இருபத்திநான்கு மணிநேரக் குண்டுவீச்சை நடாத்தியிருப்பதாகவும், அங்கு ஏற்கனவே புலிகளின் பயிற்சி முகாம்கள் இருந்தன என்றும் கூறியிருக்கின்றனர். விமானங்களின் தாக்குதல்களால் முப்பத்தைந்து பேர் கொல்லப்பட்

சோவியத் பொருளாதாரத்திற்கு

## சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வேண்டும்

திலீபன் ஞாபகார்த்த

## கரப்பந்து, வலைப்பந்து சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப்பாடசாலைகளுக்கிடையேயான தியாகி திலீபன் ஞாபகார்த்த, சுற்றுப் போட்டி ஒன்று விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினால் நடாத்தப்படவுள்ளது.

இதில் ஆண்களுக்கான கரப்பந்துப் போட்டியும் பெண்களுக்கான வலைப்பந்துப் போட்டியும் நடைபெறும்.

இதில் பங்குபற்ற விரும்புவோர் குழுவீரர்களது கையொப்பத்துடன் பெயர்ப்பட்டியல் பாடசாலை அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்டு 12 ஆம் திகதிக்கு முன் தத்தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில் ஒப்படைத்தல் வேண்டும். இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பிரேமதாசா

ஆனால் இக்கூட்டத்தின் பிரதான நோக்கம் பிரேமதாசா அதிருப்தியாளர்களை கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கான ஒழுங்கு நடவடிக்கைத் தீர்மானத்தை நிறைவேற்றுதலேயாகும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

அதிருப்தியாளர்கள்கட்சியில் இருந்து வெளியேற்றப்படும் பட்சத்தில் இவர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க வேண்டி வரும் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

அமைச்சர்கள் நீக்கம்

அதேவேளை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அதிருப்தியாளர்களான முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலியும். ஜி. எம் பிரேமச்சந்திராவும் ஐக்கிய தேசியக்கட்சி செயற்குழுவிலிருந்து நேற்று முதல் விலக்கப்பட்டுள்ளார்கள்.

பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவில் கையெழுத்திட்டவர்களுக்கு எதிராக ஐ. தே. கட்சி எடுத்துள்ள முதல் நடவடிக்கை இதுவாகும்.

நாட்டின் இன்றைய அரசியல் நிலை குறித்தும் செயற்குழு ஆலோசனை கலந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊழியர்

1991 ஆனிமாதத்தில் இருந்து வருடமொன்றுக்கு ரூபா 27,000 மும் அதற்கு

## சேவைநலம் பாராட்டு

(சுன்னாகம்)

சுன்னாகம் அஞ்சலக ஓய்வு பெற்ற பிரதம தபால் அதிபர் இ. திருநாவுக்கரசு மற்றும் அவருடன், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் சேவை நலத்தைப் பாராட்டு முகமாக இன்று (7-9-91) சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலத்தில் பிற்பகல் 3 மணிக்கு விழா ஒன்றுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் திரு வை. இராசையா இவ்விழாவிற்குத் தலைமை வகிப்பார்.

ஆண்டு ஆறிற்கான

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா நூலை வெளியிட்டு வைப்பார். இந் நிகழ்ச்சிக்கு அனைவரையும் கலந்துகொள்ளும்படி சமூகக்கல்வி மன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

கருத்து

விடுத்த அறிக்கையில் மேலும் இதுதான் இலங்கையில் நிலவும் ஜனநாயக அமைப்பிலுள்ள மிகப்பெரும் குறைபாடும் எனக் குறிப்பிட்டுள்ளதோடு ஜனாதிபதிக்கு ஏராளமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதனாலேயே இது எழுந்திருப்பதாகவும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

லலித்

ம்பு மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட முக்கியமான இந்த விடயத்தை விசாரிக்கும் அதிகாரம் தமக்கு இல்லை என்று கூறியே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் லலித் அத்துலத்

3 உதவி விரிவுரையாளர் - ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது ஒரு வருடத்திற்கு.

4 தற்காலிக உதவி விரிவுரையாளர் - ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களிற்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 1.50 முத்திரை யொட்டப்பட்ட 23x10 ச. மீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல்வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991.09 04

(B-3072)

---

தார்.

இந்தியா போரை விரும்பவில்லை என்றும், சீனா உட்பட அனைத்து அயல் நாடுகளுடனும் உறவுகளை மேம்படுத்தவே இந்தியா விரும்பு

---

மணலாற்றில்

கச் செயற்பட்டு வந்த நெடுங்கேணி கிராமத்தின் மீது தாம் இருபத்திநான்கு மணிநேரக் குண்டுவீச்சை நடாத்தியிருப்பதாகவும், அங்கு ஏற்கனவே புலிகளின் பயிற்சி முகாம்கள் இருந்தன என்றும் கூறியிருக்கின்றனர். விமானங்களின் தாக்குதல்களால் முப்பத்தைந்து பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஓமந்தை கிழக்குப் பகுதி கடந்த நான்காம் திகதி இரவு ஏழு மணியில் இருந்து மனித நடமாட்டத்திற்குத் தடை செய்யப்பட்ட பகுதி என்று இராணுவம் துண்டு-பிரசுரத்தை விமானங்களில் இருந்து வீசியுள்ளதாக எமது வவுனியா நிருபர் அறிவிக்கிறார்.

மணலாறு - முல்லைத்தீவுப் பகுதியில் புலிகளின் பதிலடியைக் குறைத்துக் கொள்ளும் நோக்குடன் சிறிலங்காப்படைகள் தமது தாக்குதல்களை ஓமந்தை வரை பரவலாக்கி உள்ளதாகவும் கூற படுகிறது.

விமானங்களில் இருந்து யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மணலாறு காடுகள் மீது பீப்பாக்குண்டுகள் வீசப்படுவதால் பல்வேறு இடங்களில் புகைமண்டலங்களாகக் காட்சி தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெடுங்கேணி, தண்ணீர்முறிப்பு, நித்திகைக்குளம் போன்ற இடங்களில் பல கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களில் பல்வேறு இடங்களிலும் இராணுவம் கடும் இழப்புக்களைச் சந்தித்துள்ளது. எனினும் குறிப்பிடத்தக்கதாக எந்தவிபரமும் கிடைக்கவில்லை.

---

பஞ்சத்தை

பிட வேண்டுமே ஒழிய எரித்திரியாவுடனும், எதியோப்பியாவுடன் ஒப்பிடுவது தவறு ஆகும். மிகப் பெரிய வக்கிர தன்மையுமாகும் எனத் தெரி தெரிவித்தார். (ச)

---

சோவியத் யூனியனின் வருங்கால வெளியுறவுக் கொள்கை குடியரசுகளின் ஆலோசனை கலந்துதான் தயாரிக்கப்படும் என்று சோவியத்தின் வெளியுறவு அமைச்சர் பொரிஸ் பாங்கின் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பொரிஸ் பாங்கின் சோவியத் யூனியன் இனி லட்சிய அடிப்படையை கருத்தில் கொள்ளாது என்றும், வாணிப, சர்வதேச உறவுகள் அடிப்படையில் பல நாடுகளுடன் தொடர்புகளை பரிசீலிக்க மொஸ்கோ எண்ணியுள்ளது என்றும் தெரிவித்தார்.

## சோவியத் பொருளாதாரத்திற்கு

# சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வேண்டும்

சோவியத் பொருளாதாரத்தை சீர்திருத்துவதற்கான முயற்சியில் சர்வதேச சமுதாயமும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மொஸ்கோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கொர்பசேவ் சீர்செய்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புத் தேவையெனத் தெரிவித்தார்.

---

## மாவீரர் விபரம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று விடுதலைப் போராட்டத்தில் வீரமரணமடைந்த சகல மாவீரர்களினதும் விபரங்கள் உடனடியாகத் தேவைப்படுவதாகவும் விபரங்கள் தெரிந்தோர் யாழ். இந்துக்கல்லூரியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் இந்துக்கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

---

மணலாறு போரில்

மார்பெருவழித்தோப்புமூதூர் பாபு (கந்தசாமி ஆனந்தம் விசன்கேணி, கிரான், மட்டக்களப்பு), பாரூக் (தனபாலன் சிறிதரன், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி),, ஜானி (குலசேகரம்பிள்ளை கலைவாணன், நாலாம்வட்டாரம் புங்குடுதீவு), ரஞ்சித்குமார் (பாலகுமார், மூன்றாம் வட்டாரம், புங்குடுதீவு), இராவணன் (கதிரவேலு கிருபாகரன் நெல்லியடி, கரவெட்டி), அருள் நங்கை (பிரேமலதா மார்க்கண்டு சேரர் ஊறணி, வல்வெட்டித்துறை)

இந்த வீர வேங்கைகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

## எரிகுண்டுத் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை பத்து மணியளவில் கட்டுவன்பகுதியை நோக்கி எரிகுண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் வீடொன்று முற்றாக எரிந்து சேதத்திற்குள்ளாகியுள்ளதாகத் தெரிய வருகிறது.

---

குறிகாட்டுவான்

லேயே திரும்பிச் சென்று கடலில் நின்றவாறு பீரங்கித் தாக்குதல் நடாத்திப்பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டது. இதனால் சில நிமிட நேரங்களுக்கு இருதரப்பினருக்கும் இடையில் மோதல் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நயினாதீவு சிறிலங்கா கடற்படை முகாமில் இருந்து குறிகாட்டுவானை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

---

வீடுகளுக்கு

இராணுவத்தினரால் தமிழருக்குச் சொந்தமான பல வீடுகள் எரிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமையன்று நிகழ்ந்துள்ளது.

---

குந்து நேற்று முதல் விலக்கப்பட்டுள்ளார்கள்.

பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவில் கையெழுத்திட்டவர்களுக்கு எதிராக ஐ. தே. கட்சி எடுத்துள்ள முதல் நடவடிக்கை இதுவாகும்.

நாட்டின் இன்றைய அரசியல் நிலை குறித்தும் செயற்குழு ஆலோசனை கலந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

அரச ஊழியர்

1991 ஆனிமாதத்தில் இருந்து வருடமொன்றுக்கு ரூபா 27,000 மும் அதற்கு மேல் சம்பளம் பெறுவோர்களையும் ரூபா 17,280 தொடக்கம் ரூபா 27,000 வரையும் சம்பளம் பெறுவோரையும், ரூபா 16,500 க்குக் கீழ் சம்பளம் பெறுவோரையும் வெவ்வேறான பட்டியலில் தருமாறு பணிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களை மேற்கூறிய பட்டியலில் சேராது மேற்படி சம்பள அடிப்படையில் தனிப் பட்டியலாக அனுப்பும்படியும் கோரப்பட்டுள்ளது.

---

ஜனநாயக அமைப்பிலுள்ள மிகப்பெரும் குறைபாடும் எனக் குறிப்பிட்டுள்ளதோடு ஜனாதிபதிக்கு ஏராளமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதனாலேயே இது எழுந்திருப்பதாகவும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

---

லலித்

ம்பு மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட முக்கியமான இந்த விடயத்தை விசாரிக்கும் அதிகாரம் தமக்கு இல்லை என்று கூறியே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் லலித் அத்துலத் முதலி தலைமையிலான எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனுவைத் தள்ளுபடி செய்தது.

---

பங்கீட்டு

நாலு அங்கத்தவராயின் ஐந்து கிலோ மாவும், ஐந்து, ஐந்து அங்கத்தவர்களுக்கு மேல் உள்ள குடும்பத்துக்கு ஆறு கிலோ மாவும் வழங்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

## மரண அறிவித்தல்

### திருமதி யோகமணி கந்தையா

திருமதி யோகமணி கந்தையா 02.09.91 லண்டனில் காலமானார். இவர் S. கந்தையா (முன்னாள் உள்ளூர் ஆட்சி திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற செல்லப்பா தம்பதிகளின் அன்பு மகளும், காலம் சென்ற சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலம் சென்ற யோகரட்ணம் (முன்னாள் நில அளவை திணைக்களம்) யோகராசா (முன்னாள் கட்டடத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு சகோதரியும், சந்திரகுமாரன், சந்திரகுமாரி, சந்திரசேகரன், சந்திரமலர், சந்திரகாந்தி, சந்திரமோகன், சந்திரகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜசூரியர், விக்னேஸ்வரன், ரவீந்திரன் சிவசேகரம், சுகுமார், பத்மானந்தவேல், உஷா, சாந்தினி, மிரிநளானி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 07.09 91) பகல் 12-00 மணிக்கு. 49 Courtlands Drive Eepson, Surrey London இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

(B/3074

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.